[1979 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆய்வுப் பணிகளைப் பொறுத்தவரையில் அவைகள் மார்ச் மாதம் கடைசிக்குள் முடியும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அது முடிந்ததற்குப் பின்னாலே அது சரியான திட்டமா, நல்ல திட்டமா, விவசாயிகளுக்குப் பலன் அளிக்கக்கூடிய திட்டமா என்பதை அந்த தகவல்களைக் கொண்டு இந்தத் திட்டம் பற்றி முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில் யானைக்கால் வியாதித்தடுப்பு.

*வினா எண் 98:—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் யானைக்கால் வியாதி அதிகமாக பரவி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) வட ஆற்காடு மாவட்டம் யானைக்கால் வியாதி அதிகமாகப் பரவும் வாய்ப்பு உள்ள பகுதியாகும்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில், வேலூர், இராணிப் பேட்டை, வந்தவாசி, செய்யாறு, காவேரிப்பாக்கம், சத்துவாச் சேரி, பள்ளிக்கொண்டா ஆகிய இடங்களில் தேசிய யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. அரக்கோணம், ஆரணி, குடியாத்தம், திருவண்ணாமலை, வாணியம்பாடி, போரூர், வாலாஜாப்பேட்டை, காந்தி நகர், திருவத்திபுரம் ஆகிய உள்ளாட்சிகளில் விரிவான ஆய்வு செய்யப் பட்டு, நோயின் விகிதம் கண்டறியப்பட்டு சம்பந்தப்பட்ட நகராட்சிகளும், பேரூராட்சிகளும் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் தடுப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தி வருகின்றன.

3. இம்மாவட்டத்தில், நெமிலி பேரூராட்சி, காங்கேய நல்லூர், சேத்துப்பட்டு ஆகிய இடங்களிலும் மக்கள் நல்வாழ்வுத் துறை தடுப்பு மருந்துத்துறை இயக்குநரால் விரிவான கணிப்பு செய்யப்பட்டு அதன்படி அங்கு யானைக்கால் நோய் பரவியுள்ள தாக அறியப்பட்டு, அதற்கான தடுப்பு நடவடிக்கை திட்டங்கள் தீட்டப்பட்டு அப்பேரூராட்சிகளின் ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டுள்ளது.

[1979 பிப்ரவரி 19

மேலும், ஆம்பூர், திருப்பத்தூர், பேரணாம்பட்டு, தாரப்படவீடு ஆகிய இடங்களில் கொசுத் தொல்லை பரவி யிருப்பதால் இந்நோயை கட்டுப்படுத்த கொசுத் தடுப்பு நடவடிக்கைகள், சம்பந்தப்பட்ட நகராட்சியினரால் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளர்கள் பதவிகள்.

*வினா எண் 99—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் அனைத்துத் துறைக்கும் விரிவுரையாளர்கள் உள்ளார்களா?

(ஆ) சில துறைகளுக்கு இல்லையெனில் உடன் பூர்த்தி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) உள்ளனர்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

இராணுவப் பணியிலிருந்து திரும்பும் மருத்துவர்கள்.

*வினா எண் 100—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராணுவத்தில பணியாற்றி விட்டு திரும்பிய டாக்டர் களை வேலையில் அமர்த்துவதில் அரசு முன்னுரிமை கொடுக் கிறதா?

(ஆ) அவர்களுக்குக் கொடுக்கப்படும் மற்ற சலுகைகளின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) ஆம்.

(ஆ) (1) ஐந்து வருடம் இராணுவத்தில் சேவை செய்து விட்டு திரும்பும் மருத்துவப் பட்டதாரிகளுக்கு தற்காலிக உதவி அறுவை மருத்துவர் நியமனத்தில் முன்னுரிமை தரப்படுகிறது.

(2) ஆண்டுதோறும் ஏற்படும் உதவி அறுவை மருத்துவர் களின் நிரந்தரப் பணியிடங்களில் ஐந்து சதவீதம் இராணுவத்தில் பணிபுரிந்து திரும்பியவர்களுக்கும் ஒதுக்கப்படுகிறது; இதன் மூலம் இவர்கள் தேர்வு ஆணைக் குழுவால் முறையான உதவி அறுவை மருத்துவர்களாக நியமிக்கப்பட தேர்ந்தெடுக்கப்படு வதில் சலுகை காட்டப்படுகிறது.